# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 18 புதன்கிழமை 02.04.2025 கதிர் 169







# நால்வர் மீதான பிரிட்டனின் தடை பற்றி ஆராய மூவர் கொண்ட குழு நியமனம்!

## அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு



கொழும்பு, ஏப். 02

சவேந்திர சில்வா உள்ளிட்ட மூன்று முன்னாள் படைத் தள பதிகள் மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) ஆகிய 4 இலங்கையர்களுக்கு பிரித்தானியா விதித்துள்ள தடை தொடர்பாக ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்குவதற்காக மூன்று பேர் கொண்ட அமைச்சரவை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

7

## முன்னாள் வட மத்திய முதலமைச்சருக்கு 16 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை



கொழும்பு, ஏப். 02

வட மத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் எஸ். எம். ரஞ்சித் மற்றும் அவரது மைத்துனி ஷாந்தி சந்திரசேன ஆகியோருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் இன்று செவ்வாய்க்கிழமை 16 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

7

## நிதி மோசடிக் குற்றச்சாட்டு: அருண் தம்பிமுத்து கைது!



மட்டக்களப்பு, ஏப். 02

மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல்பிரமுகர் அருண்தம்பிமுத்து இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து சென்ற நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் அவர் பாசிக்குடாவில்

7

## புதிய அரசமைப்பு எப்போது இயற்றப்படும்?

### நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கருத்து

கொழும்பு, ஏப். 02

“புதிய அரசமைப்பு இயற்றப்படுவதற்குரிய கால எல்லையை என்னால் சரியாகக் குறிப்பிட முடியாது. ஆனால், ஐந்தாண்டு காலப் பகுதிக்குள் இதற்குரிய பணி நிச்சயம் நிறைவேறும்.” - என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது புதிய அரசமைப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

7




## இ.போ.ச. பஸ். மோதி 2 வயது சிறுவன் சாவு

கொழும்பு, ஏப். 02

களுத்துறை - வஸ்கடுவ பிரதேசத்தில் பஸ் மோதி சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

7



## போதைப்பொருளுடன் மனைவியும் துப்பாக்கியுடன் கணவனும் சிக்கினர்



கொழும்பு, ஏப். 02

வத்தளை விடுதியில் சுயநினைவின்றி இருந்த பெண்போதைப் பொருளுடனும், அவரது கணவன் ரி - 56 ரக துப்பாக்கியுடனும்கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில்

7

## மொரட்டுவை கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!



கொழும்பு, ஏப். 02

மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொரலவெல்ல, பொல்வத்தை பிரதேசத்தில் உள்ள கடற்கரைப் பகுதியில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

7

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மீண்டும் உச்சம் தொடும் முட்டை விலை?



கொழும்பு,ஏப்.01

முட்டை உற்பத்தியாளர்கள் தற்போது வற் வரி செலுத்த வேண்டியிருப்பதால் கோழிப் பண்ணைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொள்கிறதாக இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் எச்.குணசேகர தெரிவித்துள்ளார்.

கோழிப்பண்ணை உரிமையாளர்களைப் பாதுகாக்க அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால் மீண்டும் ஒரு முட்டையின் விலை 70 ரூபாய்க்கு மேல் உயர்வதைத் தடுக்க இயலாது என்றும் அவர் கூறினார்.

அரிசி, காய்கறிகள் மற்றும் மீன்பிடித் தொழில் போன்ற விவசாயப் பொருட்களுக்கு வற் வரி விதிக்கப்படவில்லை என்றாலும், கோழிப்பண்ணைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்துகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

முட்டை உற்பத்தி அதிகரித்திருந்தாலும், முட்டைகளுக்கான தேவை குறைந்து வருவதால் நாட்டில் முட்டை உற்பத்தி உபரியாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

முட்டை உற்பத்தியாளரின் வருமானத்தின் அடிப்படையில் ஏயுவு நிர்ணயிக்கப்படுகிறது என்றும், முட்டை உற்பத்தியாளர்கள் அதற்கேற்ப தங்கள் வரி கோப்புகளைத் திறக்க வேண்டும் என்றும் தலைவர் கூறினார். (ஐ)

# தென்னை, பனைத் தொழிலாளர்களுக்கு காப்பீட்டுத் திட்டம்




கொழும்பு,ஏப்.01

இலங்கையில் தென்னை மற்றும் பனைத் தொழில்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த விவசாய மற்றும் விவசாய காப்புறுதி சபை திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

அதன்படி, விபத்து மரணம் மற்றும் காயங்கள் தற்றுத் எலும்பு முறிவுகளுக்கான காப்பீட்டுக் கொள்கையை வழங்க விவசாய மற்றும் விவசாய காப்புறுதி சபை திட்டமிட்டுள்ளது.

இது ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படலாம் எனறும் குறிப்பிட்டுளுளது.

இந்தத் திட்டத்தின் கீழ், தொழிலாளர்கள் மரணம் அல்லது ஃ அல்லது மொத்த நிரந்தர ஊனம் ஏற்பட்டால் ரூ.500,000, ரூ.1,000,000 அல்லது ரூ.2,000,000 காப்பீட்டுத் தொகையைப் பெறுவார்கள்.

விபத்து காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்படும் போதும் குறித்த காப்பீடு தொகையை பெற முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# ஹைலண்ட யோகட், திரவ பாலின் விலை குறைந்தது




கொழும்பு,ஏப்.01

ஹைலண்ட யோகட் விலையை செவ்வாய்க்கிழமை (01) முதல் 10 ரூபாவினால் குறைப்பதற்கு மில்கோ நிறுவனம் முடிவு செய்துள்ளது.

அதன்படி, முன்னர் 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஹைலண்ட் யோகட் ஒன்றின் விலை புதிய விலை 70 ரூபாய் என்று மில்கோ நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை மேலாளர் சம்பத் குணரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், மில்கோவால் உற்பத்தி செய்யப்படும் திரவ பால் பொருட்களின் விலைகளும் பொதுமக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், குறைக்கப்பட்டுள்ளதாக மேலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், முன்னதாக 225 ரூபாய்க்கு விற்கப்பட்ட 450 மில்லி லீற்றர் நீண்ட நாள் பயன்படுத்தக் கூடிய திரவப் பாலின் விலை குறைக்கப்பட்டு 200 ரூபாயாக பதிவாகியுள்ளது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# கிளிநொச்சியில் நீர் வழங்கல் திட்டத்திற்கு அனுமதி




கொழும்பு,ஏப்.01

உலக வங்கியின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்திற்கு பாரிய நீர் வழங்கல் திட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அனுமதிவழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த 28.03.2025 இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே மேற்படி திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் நீரியல் வழங்கல் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூடடத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறிதரன், இராமநாதன் அர்ச்சுனா,இளங்குமரன், ரஜீவன், ஆகியோருடன் கிளிநொச்சி அரச அதிபர் முரளிதரன், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

போது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட பொறியியலாளர். எஸ். சாரங்கன் வட்டக்கச்சி நீர் வழங்கல் திட்டம், கண்டாவளை கிராமிய நீர் வழங்கல் திட்டம், இரணைமாதாநகர் கிராமிய நீர் வழங்கல் திட்டம், மற்றும் பாரிய கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் போன்ற திட்டங்களுக்கான அனுமதிக்கு யோசனை சமர்ப்பித்திருந்தார். இதனை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அதற்கான அனுமதி வழங்கியுள்ளது.

கிளிநொச்சி நகரத்தின் விரைவான நகரமயமாக்கல், முன்மொழியப்பட்ட பரந்தன்

கைத்தொழில் வலயம் மற்றும் அறிவியல் நகர் கைத்தொழில் வலயம் (பல்கலைக்கழகம் மற்றும் ஆடை தொழிற்சாலைகள் உள்ளிட்ட நிறுவனங்கள், தொழிற்சாலைகள்) உட்பட அபிவிருத்தி அடைந்து வரும் கைத்தொழில் துறையினையும் கருத்தில் கொண்டு அதற்கான உட்கட்டுமான வசதிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற வகையில் பாரிய கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்திற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தி, மக்களின் வாழ்க்கைதர முன்னேற்றம் முக்கியமாக தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் என்பனவற்றுக்கு கைத்தொழில்

வலயங்களின் அவசியம் கருதி தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதனை ஊக்குவிக்கும் பொருட்டு அதற்கான நீர் மின்சாரம், போக்குவரத்து போன்ற உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை அடிப்படையாக கொண்டுள்ளதோடு, கண்டாவளை பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு 2 வீதமானவர்கள் சிறு நோயால் பாதிக்கப்பட்டுவதை கவனத்தில் எடுத்து மேற்படி நீர் வழங்கல் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# மற்றவை’ என ‘பில் போடும் வர்த்தகர்கள்

கொழும்பு,ஏப்.01

தற்போது நாட்டின் பல பகுதிகளில் கீரி சம்பா மற்றும் சம்பா அரிசிக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது, தற்போதைய பற்றாக்குறை காரணமாக இந்த அரிசி வகைகளின் விலை கணிசமாக அதிகரித்துள்ளதாக அறியமுடிகின்றது.

அதன்படி, சில பகுதிகளில், ஒரு கிலோ கிராம் கீரி சம்பா அரிசி 310 ரூபாய் முதல் 320 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ கிரம் சம்பா அரிசி 270 ரூபாய் முதல் 290 ரூபாய் வரையிலும் விற்கப்படுகிறது.

பல பகுதிகளில், கடை உரிமையாளருக்கு மிக நெருக்கமான வாடிக்கையாளர்களால் மட்டுமே இந்த விலையில் கூட அரிசி வாங்க முடியும், மேலும் அரிசி வாங்குவதற்கான ரசீதுகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

ஒரு ‘பில்’ கோரப்படும்போது, ‘மற்றவை’ என்று குறிப்பிடும் பில் வழங்கப்படுகிறது, இதன் விளைவாக, நுகர்வோர் அதிக விலைக்கு அரிசி விற்கப்பட்டதாகக் கூறி நுகர்வோர் விவகார அதிகாரசபையில் புகார் அளிக்க முடியவில்லை.

அரிசி கட்டுப்பாட்டு விலையின்படி, ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி ரூ.10க்கு விற்கப்பட வேண்டும். 240 ரூபாய்க்கும், ஒரு கிலோ கிராம் கீரி சம்பா அரிசி 260 ரூபாய்க்கு விற்கப்பட வேண்டும். இருப்பினும், உள்ளூர் சம்பா அல்லது கீரி சம்பா இந்த விலையில் சந்தையில் கிடைப்பதில்லை என்றும் அறியமுடிகின்றது. (ஐ)



# மிதி வெடி



வடக்கில இருக்கிற எங்கட அதிகாரிகள் “பலே கில்லாடிகள்” பாருங்கோ.....

சட்டமாக இருக்கட்டும், சம்பிரதாயமாக இருக்கட்டும் தனக்குத் தனக்கேற்ற மாதிரி வளைச்சுப் போடுவினம்–கருத்தும் சொல்லுவினம்...

வடிவேலு படத்தில வாற மாதிரி “அது வேறவாய் – இது நாறவாய்” எண்டும் சொல்லாம்.

வடக்கு மாகாணத்தின்ர கல்வி அமைச்சுக்குள்ள நீண்டகாலமாக் கடும் புகைச்சல் பாருங்கோ... அப்பப்ப ஒண்டுரெண்டைச் சொல்லியும் இருக்கிறன்.

மேல இருக்கிறவை தங்கட வசதிக்கேத்த மாதிரிப் பிழையளைக் கண்டும் காணாமல் இருந்தால் கீழ உள்ளவை பயமில்லாமல் பிழை விடுவினம் தானே?

இந்துக்களுக்குப் பேர் போன சின்னப்பள்ளிக்கூடத்தில இருந்தவர், முந்தி இருந்த பள்ளியிலயும் “வசூல் ராஜா”. அங்க இருக்கேக்க நகரத்து மணிக்கூட்டுக் கடையில “பைசல்” பண்ணுறவை. நகரத்துக்குள்ள வந்தாப்பிறகு நேரடியாவே வாங்கியிருக்கிறார். இதை நான் ஒருக்காச் சொன்னனான். உங்களுக்கு நினைவிருக்கோ தெரியாது.

அதிபர் நல்லா விளையாட, அதிகாரிகள் கண்டும் காணாமல் இருக்கினம் எண்டு நான் சொன்னது பிழையாம் எண்டு எனக்கு “கோல்” எடுத்த அதிகாரி ஒருத்தர், “அவர் பிழை விடுறார் தான் வாற மாசத்தோட போப்போறார், அதால தான் நாங்கள் பேசாமல் இருக்கிறம்” எண்டு அதிபரின்ற பிழைக்கு அரிதாரம் பூசுறார். எனக்கு வந்த கடுப்புக்கு அவர் பேசின “ரெக்கோடிங்”ஐ வெளியில விட்டிருக்க வேணும்.

நான் எந்தக் காலத்திலயும் அப்பிடிச் செய்ததில்லை – இனிச் செய்யவும் மாட்டன்..

இப்ப அது இல்லைப் பிரச்சினை. வடக்கு மாகாணத்தின்ர தலைமைக் கதிரையில இருக்கிற ஒருத்தர் தான் தலையிடி. வாற மாசத்தோட வீட்ட போப்போறார். தான் போனாலும் தன்ர “வாலு”களை அங்கங்க விதைச்சுப் போட்டுப் போயிட வேணும் எண்டு கடுமையா வேலை செய்யுறாராம்.

உவற்றை “அடிப்பொடி” ஒருத்தர் தான் மாநகரத்தை விட்டுப் போமாட்டன் எண்டு அடம் பிடிச்சுக் கொண்டு நிண்ட காலத்தில, மக்களுக்குக் கிடைக்க வேண்டிய எதையும் சரியாப் பெற்றுக் குடுக்கேல்ல எண்டு கணக்காய்வார் திணைக்களம் தன்ர வருடாந்த அறிக்கையில பொரிஞ்சு தள்ளியிருக்குது.

கடந்த காலத்தில 30 ஒப்பந்தக்காரருக்குக் குடுத்த முற்பணத்துக்கு வேலையும் வாங்காமல், குடுத்த காசையும் திரும்ப வாங்காமல் “பேஸ் புக்”ல படம் போடுறதில மட்டும் குறியா இருந்துட்டுப் போயிருக்கிறார் அந்த முன்நாள். இதை விட மாநகர மக்களுக்கு எண்டு வந்த 373.562 மில்லியன் ரூபாயைப் பக்குவமாப் பாதுகாத்துத் திருப்பி அனுப்பி இருக்கிறர். இவர் இவ்வளவும் செய்தது போட்டு மாகாணத் தலைமையின்ர ஆசீர்வாதத்தோட தானாம்.

இப்ப அந்தத் தலைமை அடுத்த மாதம் வீட்ட போப்போறார். தான் போனாலும் தன்ர சொல்லுக்குத் தாளம் போடுறவைய விட்டுட்டுப் போக வேணும் எண்டதுக்காக “வயசுகுறைஞ்ச அந்த அரசர்” கடுமையா வேலை செய்யுறாராம்.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கதிரையில தனக்கு “சலாம்” போடுற ஒருத்தரை இருத்திவிட வேணும் எண்டு ஓடித் திரிஞ்சிருக்கிறார். விண்ணப்பிச்ச மூண்டு பேரில ரெண்டு பேர் தான் இங்கத்தை ஆக்கள்... ரெண்டு பேருக்கும் “ஐயா” செய்த – செய்கின்ற திருகுதாளங்கள் அத்தனையும் தெரியுமாம். அதால அவை வந்தால் தன்ர “பப்பு” வேகாது எண்டதால மூண்டாவது ஆளைப் “பீ.டி” ஆக்கிப்போட வேணும் எண்டு துடியாத் துடிக்கிறாராம்.

வடக்கில இருந்து, கிழக்குக்குப் போய் அந்த மனுசனோட “டீல்” பேசுப்பட்டிருக்கு.... “லட்டு” தின்னுறதுக்கு ஆருக்கு விருப்பமில்லாமல் இருக்கும். அந்த மனுசனும் ஓம் எண்டு சொல்லி இருக்குதாம்.... பாப்பம் என்ன நடக்குதெண்டு.... எட்டாம் திகதி “இன்ரவியூ” முடியத் தெரியும் தானே?

கிழக்கில இருக்கிறவர் உண்மையிலேயே தகுதி – திறமை இல்லாமல் தட்டுப்பட்டுப் போனாலும், “பிரதேசவாதம்” எண்டு சொல்லி – அதை வச்சு அரசியல் செய்யுறதுக்கும் ஆயத்தங்கள் நடக்குதாம்...

அது தான் நான் ஆரம்பத்திலயே சொல்லிற்றனே....

“சட்டமாக இருக்கட்டும், சம்பிரதாயமாக இருக்கட்டும் தனக்குத் தனக்கேற்ற மாதிரி வளைச்சுப் போடுவினம்” எண்டு.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்ன செய்யப் போகுதெண்டு.... விசியம் அஞ்சு நாளில அம்பலமாகும்... பொறுங்கோ பாப்பம்.... அதுக்குப்பிறகு உள்ளுக்குள்ள நடந்த விசியங்களைச் சொல்லுறன்...

–நரமுனி–

# திமுக கரை வேட்டி கட்டினால் பொட்டு வைக்காதீங்க: ஆ.ராசா அடாவடி பேச்சு



திமுக எம்.பி.,யான ஆ.ராசா, ஹிந்துக்களுக்கு எதிராகவும், ஹிந்து மத நம்பிக்கைகளை புண்படுத்தும் விதமாகவும் அவ்வப்போது பேசி சர்ச்சையை ஏற்படுத்துவதை வழக்கமாக கொண்டவர்.

சிலருக்கு ஏதாவது ஒரு வகையில் மீடியாக்களில் பெயர் அடிபட வேண்டும் என்ற வியாதி இருக்கும். இந்த கியூ"வில் முதலில் நிற்பவர் ஆ.ராசா. இவர் மட்டுமே திராவிட கொள்கைகளை தாங்கிப் பிடிப்பவர் என்று மற்றவர்கள் நினைக்க வேண்டும் என விரும்புபவர். மற்றவர்களுக்கெல்லாம் ஒன்றும் தெரியாது என்று நினைப்பவர்.

'நாங்கள் ராமருக்கு எதிரிகள் சூத்திரனாக இருக்கும் வரை நீ விபச்சாரியின் மகன். ஹிந்துவாக இருக்கும் வரை நீ பஞ்சமன். ஹிந்துவாக, இருக்கும்வரைநீதீண்ட தகாதவன். எத்தனை பேர் விபச்சாரியின் மகனாக இருக்க விரும்புகிறீர்கள்?' போன்ற பல துவேஷங்களை ஹிந்து மதத்திற்கு எதிராக அள்ளி வீசியவர்.

அந்த வகையில் தற்போது மீண்டும் ஒரு சர்ச்சை கருத்தை பேசி ஹிந்துக்களின் கோபத்திற்கு ஆளாகி இருக்கிறார் இந்த ஆ.ராசா.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் திமுக மாணவர் அணி செயலாளர்கள் மற்றும் துணை செயலாளர்களின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்ற ஆ.ராசா பேசியதாவது:

கடவுள் தேவைப்படுவோர் வைத்து கொள்ளலாம். சாமி கும்பிட வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் நீங்களும் பொட்டு வைத்து, சங்கியும் பொட்டு வைக்கும்போது, நீங்களும் கையில் கயிறு கட்டி, சங்கியும் கையில் கயிறு கட்டும்போது எவன் சங்கி, எவன் திமுககாரன் என்ற வித்தியாசம் தெரியாது. இதனால் தான் சொல்கிறேன் திமுக கரை வேட்டி கட்டும்போது பொட்டு வைக்காதீங்க. இவ்வாறு பேசியுள்ளார்.

கட்சி வேறுபாடின்றி நெற்றியில் விபூதி, குங்குமம் இட்டுக்கொள்வது அனைத்து ஹிந்துக்களின் பழக்கம். தான் ஒரு உண்மையான ஹிந்து என்று அவர்கள் தங்களை அடையாளப்படுத்திக்கொள்கிறார்கள். தெய்வ நம்பிக்கையையும் பறைசாற்றுகிறார்கள். இவர்கள் எல்லோரும் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள்.

பழநி, திருப்பதி கோயில்களுக்கு சென்று வரும் பக்தர்கள் கடவுளை நினைத்து கைகளில் கயிறு கட்டிக்கொள்வது திமுக என்ற கட்சி தோன்றுவதற்கு முன்பு இருந்தே உள்ள வழக்கம். இதற்கும் அரசியலுக்கும் என்ன சம்மந்தம்?. பா.ஜ., கட்சியினர் கைகளில் கயிறு கட்டுவது, அரசியல் அடையாளத்திற்காக அல்ல. தான் ஒரு தெய்வ நம்பிக்கை உள்ளவன் என்று காட்டிக்கொள்வதற்காக.

இதை புரிந்து கொள்ளாத ராசா, தமிழகத்தில் உள்ள ஹிந்துக்கள் நேற்று கயிறு வாங்கி, இன்று கையில் கட்டிக்கொள்வதாக நினைத்துக்கொண்டு பினாத்திக்கொண்டு இருக்கிறார்.

இந்நிலையில், திமுக கரை வேட்டி கட்டினால், ஹிந்து என்ற அடையாளத்தை தூக்கி எறிய வேண்டும் என்பது போல ஆ.ராசா பேசியது திமுகவினருக்கே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. திமுக தலைவரும் முதல்வருமான ஸ்டாலினின் மனைவி துர்கா, கோயில் கோயிலாக சென்று வருகிறாரே, அவர் திமுக அனுதாபி இல்லையா.

ஆ.ராசாவின் பேச்சு தொடர்பாக திமுக அமைச்சரான சேகர்பாபுவிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, "அது ராசாவின் தனிப்பட்ட கருத்து. தலைவர் (ஸ்டாலின்) அதுபோன்று எதுவும் கூறவில்லை" என்றார். (ஐ)




## கிரீமிலேயர் வருமான வரம்பை ரூ.16 லட்சமாக உயர்த்த வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை நாடாளுமன்ற கூட்டுக்குழு பரிந்துரையின்படி, கிரீமிலேயர் வருமான வரம்பை ரூ.16 லட்சமாக உயர்த்த வேண்டும் என்று பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் வழங்கப்படும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27மூ இட ஒதுக்கீட்டில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் பயனடைவதை உறுதி செய்யும் வகையில், கிரீமிலேயர் பிரிவினரை தீர்மானிப்பதற்கான ஆண்டு வருமான வரம்பை இப்போதுள்ள ரூ.8 லட்சத்திலிருந்து கணிசமாக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு ஓபிசி வகுப்பினரின் நலனுக்கான நாடாளுமன்ற நிலைக்குழு பரிந்துரைத்துள்ளது. இது மிகவும் வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும்.

கிரீமிலேயர் வருமான வரம்பு சராசரியாக 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை உயர்த்தப்பட்டு வந்த நிலையில், பல்வேறு காரணங்களால் கடந்த 8 ஆண்டுகளாக இந்த வரம்பு உயர்த்தப்படவில்லை. இதனால், ஓபிசி வகுப்பைச் சேர்ந்தவர்கள் மத்திய அரசின் கல்வி மற்றும் வேலை வாய்ப்பைப் பெறுவதில் பல சிக்கல்கள் ஏற்படுவதாக பாட்டாளி மக்கள் கட்சி கடந்த ஐந்தாண்டுகளாக கூறி வரும் நிலையில் தான் நாடாளுமன்ற நிலைக்குழு இந்த பரிந்துரையை வழங்கியுள்ளது.

2020ம் ஆண்டில் கிரீமிலேயர் வரம்பு உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கொரோனா பெருந்தொற்று காரணமாகவும், கிரீமிலேயர் வரம்பை கணக்கிடுவதில் ஊதியம் மற்றும் வேளாண்மை வருவாயையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற வல்லுனர் குழு பரிந்துரையை செயல்படுத்துவதற்கு எழுந்த எதிர்ப்பு காரணமாகவும் அம்முயற்சி தடைபட்டது.

அதற்குப் பிறகு 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கிரீமிலேயர் வரம்பு உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அந்த ஆண்டில் அதற்கான முயற்சிகளைக் கூட மத்திய அரசு மேற்கொள்ளவில்லை என்பது வருத்தமான உண்மை.

2017ம் ஆண்டுக்குப் பிறகு கடந்த 8 ஆண்டுகளில் பணவீக்கம் கடுமையாக உயர்த்திருக்கிறது் அதை சமாளிக்கும் வகையில் பல்வேறு ஆதாரங்களில் இருந்து கிடைக்கும் வருமானமும் உயர்ந்துள்ளது.

அதற்கு இணையாக கிரீமிலேயர் வரம்பு 2020ம் ஆண்டில் ரூ.12 லட்சமாகவும், 2023ம் ஆண்டில் ரூ.15 லட்சமாகவும் உயர்த்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு செய்யப்படாததால் கடந்த சில ஆண்டுகளில் வருவாய் அதிகரித்த பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கிரீமிலேயர்களாக கருதப்பட்டு, இட ஒதுக்கீட்டு வரம்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டனர். இதை விட பெரிய சமூக அநீதி இருக்க முடியாது.

கடந்த காலங்களில் கடைபிடிக்கப்பட்டு வந்த நடைமுறைகளின்படி பார்த்தால், 2017ம் ஆண்டுக்குப் பிறகு 2026ம் ஆண்டில் மூன்றாவது முறையாக கிரிமீலேயர் வரம்பு உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை ஒரே ஒருமுறை கூட கிரீமிலேயர் வரம்பு உயர்த்தப்பட வில்லை.

இப்போது நாடாளுமன்ற நிலைக்குழுவே இது குறித்து பரிந்துரை செய்திருக்கும் நிலையில், அதை ஏற்றி மாநில அரசுகளுடனும், ஓபிசி அமைப்புகளுடனும் பேச்சு நடத்தி கிரீமிலேயர் வரம்பை ரூ.16 லட்சமாக உயர்த்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். (ஐ)



## இன்ஸ்டாகிராமில் சேட்டை பதிவு: நெல்லையில் வாலிபர்கள் கைது

திருநெல்வேலி மாவட்டம் விஜயநாராயணம் அருகே தாமரைக்குளத்தைச் சேர்ந்த மாடசாமி மற்றும் வக்கீம் பாண்டியன் ஆகியோர் இன்ஸ்டாகிராமில் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் ஆயுதங்களுடன் மிரட்டல் விடுத்து பதிவிட்டதற்காக கைது செய்யப்பட்டனர்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த வாலிபர்கள் இருவர் இன்ஸ்டாகிராமில் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் ஆயுதங்களுடன் மிரட்டல் விடுத்து பதிவிட்டு இருந்தனர். அவர்கள், இரு தரப்பினருக்கிடையே பிரச்னையை தூண்டும் வகையில், அரிவாளுடன் இருக்க கூடிய புகைப்படத்தையும், சர்ச்சைக்குரிய வசனங்களை பதிவு செய்தும் சமூகவலைதளத்தில் பதிவிட்டு பரபரப்பை கிளப்பினர்.

இது குறித்து விஜயநாராயணம் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. போலீசார் சம்பந்தப்பட்ட இன்ஸ்டாகிராம் ஐ.டி.,யை ஆய்வு செய்த போது அந்த சர்ச்சை பதிவை வெளியிட்டவர் தாமரைக்குளம், நடுத்தெருவை சேர்ந்த சண்முகவேல் மகன் மாடசாமி (22) என்பது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்தனர்.

விஜயநாராயணம் அருகே கொலை செய்யப்பட்ட தனிப்பிரிவு காவலர் ஜெகதீஷ் துரையின் படத்தை பதிவிட்டு, பகிரங்க மிரட்டல் விடுத்து வீடியோவும் வைரலானது. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தியதில், அதே தாமரைக்குளம், தெற்குத்தெருவைச் சேர்ந்த சின்னான் என்ற பேச்சிமுத்து மகன் வக்கீம் பாண்டியன் (19) என்பவர் வீடியோவை பதிவிட்டது தெரியவந்தது. இதையடுத்து அவரையும் போலீசார் கைது செய்தனர். (ஐ)

## பல்லடத்தில் கல்லூரி மாணவி ஆணவ கொலை விசாரணையில் அம்பலம்!

*திருப்பூர் பல்லடத்தில் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து உடன்பிறந்த தங்கையை அண்ணனே ஆணவக்கொலை செய்தது போலீஸ் விசாரணையில் அம்பலமானது.*

*திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே பருவாய் கிராமத்தை சேர்ந்தவர் தண்டபாணி. வெல்டிங் வேலை செய்து வருகிறார். அவரின் மனைவி விசைத்தறி தொழிலாளி. தம்பதிக்கு வித்யா என்ற மகளும், சரவணன் என்ற மகனும் உள்ளனர். வித்யா கோவையில் உள்ள அரசு கல்லூரியில் எம்.ஏ., முதலாம் ஆண்டு படித்து வந்தார்.*


*கல்லூரி மாணவி இறப்பில் மர்மம் சடலம் தோண்டியெடுத்து விசாரணை*


*கடந்த, 30ம் திகதி பெற்றோர் சர்ச்சுக்கு சென்றனர். அவரது அண்ணன் வெளியில் சென்ற நிலையில், வித்யா மட்டும் தனியாக வீட்டில் இருந்தார். பெற்றோர் மதியம் வீட்டுக்கு திரும்பிய போது, வித்யாவின் மீது பீரோ சரிந்து விழுந்து இருந்தது. அவர் ரத்த வெள்ளத்தில் இருந்தார். உடனே, 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்தனர். அவர்கள் வந்து பார்த்த போது வித்யா இறந்தது உறுதி செய்யப்பட்டது. வித்யாவின் சடலத்தை தோண்டியெடுத்து, மயானத்திலேயே பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. மாணவியின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது.*

*மாணவியை காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து அண்ணனே ஆணவக்கொலை செய்தது போலீஸ் விசாரணையில் அம்பலமானது. வேறு சமூகத்தை சேர்ந்த இளைஞரை காதல் செய்ததால் தங்கையை அண்ணன் கொலை செய்துள்ளான். (ஐ)*

பெண்களால் மட்டுமே குடும்ப அமைப்பை, கௌரவத்தை, சமய மூடநம்பிக்கைகளின் சங்கிலிகளை அறுபடாமல் பேணிகாக்க முடியும் என்கிற கருத்துருவாக்கத்தை உருவாக்கி, அவற்றின் பாதுகாவலர்களாகப் பெண்களையே முன்னிறுத்துவதன் மூலம் அதன் புனிதம் உடைபடாமல் இருப்பதைத் தந்தை வழி சமூகம் கூர்மையாகப் பார்த்துக்கொள்கிறது. தாலி, குங்குமம், தெய்வ நம்பிக்கை, குடும்பம், கணவன், குழந்தைப்பேறு மற்றும் கற்பு ஆகியவையே பெண்ணுக்கான புனிதம் என்கிற பிம்பத்தை மாய்ந்து மாய்ந்து மக்கள் மனதில் பதிய வைப்பதில் இன்றைய காட்சி ஊடகங்கள் மிகவும் அக்கறை காட்டுகின்றன.

# பெண்ணுக்குப் பெண் எதிரியா?



சமூகத்தில் பெண்கள் சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் சுயமரியாதையோடும் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக சமூக நீதி, இடதுசாரி, பெண்ணுரிமை இயக்கங்களால் பலகட்டப் போராட்டங்களின் வாயிலாகப் பல சமூக சீர்திருத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதன் பலனால் விளைந்ததே பல சட்ட உரிமைகள். இத்தகைய மாற்றங்களே சமூகத்தில் பெண்கள் கொஞ்சமேனும் சரிநிகராக முன்னேறுவதற்கான வாய்ப்பை வழங்கியிருக்கிறது. இன்று சமூகத்தில், அரசியலில், கல்வியில், அறிவியலில் பெண்களின் பங்கேற்பு கணிசமாக உயர்ந்திருக்கிறது. பல துறைகளிலும் பெண்கள் முகம் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தச் சூழல் ஏனோ பழமைவாதிகளைப் பதற்றமடையச் செய்கிறது. மேலும் இது 'கலிகாலமப்பா' என மனம் நொந்துகொள்கிறார்கள் அடிப்படைவாதிகள்.

சந்திரயான் நிலவில் கால் பதித்துவிட்டது என்று பெருமையோடு மார்தட்டிக்கொண்ட தேசபக்தர்கள், சக உயிராக இருக்கக் கூடிய பெண்ணை நிர்வாணத்தோடு இழுத்துச்செல்லும்போது எங்கே போய் ஒளிந்துகொண்டார்கள்? பெண்கள் எத்துறையில் வளர்ச்சி பெற்று வந்தாலும் பெண் குறித்தும், பெண்ணுரிமை குறித்தான பார்வை இன்னும் மலினப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளது என்பதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

'சினிமா வாய்ப்புக்காக நீங்க சமரசம் **(Adjestment)** செய்திருக்கிறீர்களா? செய்யச் சொல்லிருக்கிறார்களா?' என நடிகைகளிடம் கேள்வி எழுப்பும் ஊடகவியலாளர்கள், அதே துறையில் இருக்கும் ஆண் நடிகர்களிடம் அதே கேள்வியை ஏன் எழுப்புவதில்லை?

இத்தகைய மனநிலையில் வளர்பவர்கள், சமரசம் இல்லாமல் பெண்களால் சினிமாவில் மட்டுமல்ல எந்தத் துறையிலும் உயர்ந்த இடத்திற்கு வரமுடியாது என்கிற பொது உளவியலை நம்பவும் செய்கின்றன. இவ்வாறு சமூகத்தில் பண்பாடு, கலாசாரம், பாரம்பரியம் என்கிற பெயரில் பெண்களுக்கு எதிராக மிகவும் கெட்டித்தட்டிப்போன பல பொது உளவியல் கருத்துகளை நாம் பார்க்க முடியும்.

நாட்டின் நான்காவது மிகப்பெரிய தூணாகக் கருதப்படும் ஊடகத்தின் வளர்ச்சி என்பது அபரிமிதமானது. ஊடகம் மனித வாழ்வின் ஓர் அங்கமாகவே மாறியிருக்கிறது. அதிலும் காட்சி ஊடகம் அசைக்க முடியாத ஒன்றாகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டது. இது சமூகத்திற்கு எத்தகைய விளைவை ஏற்படுத்துகிறது என்பதே இங்கு ஆராயப்பட வேண்டியிருக்கிறது. காட்சி ஊடகத்தின் பொழுது போக்கு அம்சத்தை எடுத்துக்கொண்டால் அது மேலும் மேலும் பெண்களை இழிவுபடுத்தக்கூடிய, சிறுமைப்படுத்தக்கூடிய ஒன்றாகவே தகவமைக்கப்பட்டிருக்கிறது. தொலைக்காட்சி தொடர்களும், விவாத நிகழ்ச்சிகளுமே அதற்கான அளப்பறிய வேலைகளைத் தொடர்ந்து செய்து வருகின்றன ஊடக நிறுவனங்கள் எல்லா வணிக சேனல்களும் போட்டிப் போட்டுக் கொண்டு இத்தகைய நிகழ்ச்சிகளில் முதலீடு செய்வதன் மூலம் தனது வியாபாரச் சந்தையை விரிவுபடுத்திக் கொள்கின்றன. தொலைக்காட்சித் தொடர்களின் கதைக்கருவும், பெண்களின் கதாபாத்திரச் சித்தரிப்புகளும் மீண்டும் மீண்டும் பெண்களை மலினப்படுத்தும் செயலையே வரிந்துகட்டிக்கொண்டு செய்து வருகின்றன. பெண்களே வில்லியாகவும் கதாநாயகிகளாகவும் பிரதான பாத்திரம் வகிக்கின்றனர். தொடர்கதைகளே பெண்களின் உலகம் எனலாம். இங்கு ஆண்கள் துணைக் கதாபாத்திரங்களே. அப்படி இருக்கையில் இது எப்படி பெண்ணைச் சிறுமைப்படுத்தும் விதமாக இருக்கும் எனக் கேள்வி எழலாம். இதுவே ஆணாதிக்கத்தின் நுட்பமான அரசியல் என்பதை அடையாளப்படுத்த வேண்டியிருக்கிறது. தொடர்கதைகளை உருவாக்கும் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் பெரும்பாலும் ஆண்களே.

பெண்களால் மட்டுமே குடும்ப அமைப்பை, கௌரவத்தை, சமய மூடநம்பிக்கைகளின் சங்கிலிகளை அறுபடாமல் பேணிகாக்க முடியும் என்கிற கருத்துருவாக்கத்தை உருவாக்கி, அவற்றின்



பாதுகாவலர்களாகப் பெண்களையே முன்னிறுத்துவதன் மூலம் அதன் புனிதம் உடைபடாமல் இருப்பதைத் தந்தை வழி சமூகம் கூர்மையாகப் பார்த்துக்கொள்கிறது. தாலி, குங்குமம், தெய்வ நம்பிக்கை, குடும்பம், கணவன், குழந்தைப்பேறு மற்றும் கற்பு ஆகியவையே பெண்ணுக்கான புனிதம் என்கிற பிம்பத்தை மாய்ந்து மாய்ந்து மக்கள் மனதில் பதிய வைப்பதில் இன்றைய காட்சி ஊடகங்கள் மிகவும் அக்கறை காட்டுகின்றன.

தமிழ்த் தொடர்கள் காதலையும், காதல் திருமணங்களையும் பாதகமாகக் காட்டுவதிலே முனைப்பு காட்டிவருகின்றன. இதனால் 2010களுக்குப் பின்பு டப்பிங் செய்து வெளியிடப்பட்ட இந்தித் தொடர்களே அன்றைய இளம் வாடிக்கையாளர்களின் தேர்வாக மாறியிருந்தது. இதைக் கவனித்த தமிழ்த் தொடர்களும் இன்று காதல் காட்சிகள், காதல் பாடல்களை ஆங்காங்கே தெறித்து விடும் வித்தைகளைக் கையாள்கின்றனர்.


தொடர்களை மிஞ்சும் அளவிற்கு ரியாலிட்டி ஷோக்கள், கோமெடி ஷோக்களும் பெண்களைக் கேளிக்குரிய பொருளாகவே சித்தரிக்கின்றன. பெண்களுக்கான நிகழ்ச்சி என்கிற பெயரில் ஆண்மையைச் சிந்தனைகளைக் கொண்ட நிகழ்ச்சிகளை மேற்கொள்வதில் அவர்களுக்கு எந்தச் சலனமும் இருப்பதில்லை. இவர்களின் அறிவார்ந்த சிந்தனை, 'தமிழ்ப் பெண்கள் அழகா, கேரளப் பெண்கள் அழகா' என்று தலைப்பு வைக்கும் அளவிற்கு நீண்டிருக்கிறது. பெண்ணுரிமையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஜனநாயக எண்ணம் கொண்டோர்களின் வலுவான எதிர்ப்பால் அந்த ஒளிபரப்புத் தடை செய்யப்பட்டது. மேலும் 'தனது பெற்றோரிடம் வரதட்சணை கேட்டுப் பெறும் பெண்கள்–கேட்டுப் பெறக் கூடாது எனச் சொல்லும் பெற்றோர்', 'திருமணம் செய்ய விரும்பும் ஆண்கள், திருமணம் செய்ய விரும்பாத பெண்கள்', 'ஒரு குழந்தை போதும் என்பவர்கள்– இரு குழந்தை போக்கு சரியில்லை' என்பவர்கள் போன்ற தலைப்புகளில் ஆண்மேலாதிக்கச் சிந்தனை பண்பாட்டு ரீதியாக எவ்வாறு ஊடுருவி இருக்கிறது, அதைக் கலைய என்ன செய்ய வேண்டும் என்கிற விவாதத்தை ஏற்படுத்த முயற்சிக்காமல் எப்போதும்போல கட்டப்பஞ்சாயத்து அணுகுமுறையிலேயே விவாத நிகழ்ச்சி முடிவுபெறும்.

தனியார் தொலைக்காட்சி காமெடி நிகழ்சிகளின் கருபெரும்பாலும் பாலியல் **(sexist)**, பெண் வெறுப்பு **(misogynist)**, பாலினம் குறித்த பொத்தம் பொதுவான (புநனெநச ளுவநசநழவலிந) கருத்துகளை மீண்டும் மீண்டும் மக்கள் மனதில் பதிய வைப்பதையும் அக்கருத்துகளை **(Normalized)** இயல்பாக்குவதை காமெடி என்கிற பெயரில் தொடர்ந்து செய்துவருகின்றன. பெண்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் 'டைமிங் கமெண்ட்' செய்து அசத்தும் ஒழுக்கசீலரான காமெடி நிகழ்ச்சியின் நடுவர் தனது மனைவியை அடித்து, துன்புறுத்தி, கொலைமிரட்டல் விடுத்தது ஊர் அறிந்ததே. ஆனால், இங்கு ஆண்களின் ஒழுக்கம் குறித்து யாரும் கேள்வியெழுப்பவில்லை.

இதற்குப் போட்டியாகச் பெண்ணுக்குப் பெண் எதிரியா, தோழியா எனச் சிந்தனை செறிவூட்டும் கேள்வியை எழுப்புகிறது மற்றொரு விவாத நிகழ்ச்சி. சமூகம் சார்ந்து பேச வேண்டிய, பேசப்படாத விஷயங்கள் பல உள்ளன. அதை ஏன் விவாதப் பொருளாக்கத் தயங்குகின்றன. பெண்கள், பெண் குழந்தைகள், சிறுபான்மையினர், விளிம்புநிலை மக்கள் மீதும் அரங்கேறும் வன்முறைகளைக் கேள்வி

(ஆம் பக்கம் பார்க்க..)

# நிலநடுக்கத்தால் அதிர்ந்த பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான், திபெத்திலும் நில அதிர்வு




இஸ்லாமாபாத் பாகிஸ்தானில் அதிகாலை ஏற்பட்ட நிலநடுக்கத்தை தொடர்ந்து ஆப்கானிஸ்தான், திபெத்திலும் நில அதிர்வுகள் உணரப்பட்டது.

பாகிஸ்தானில் அதிகாலை 2.58 மணியளவில் ரிக்டர் அளவுகோலில் 4.3 ஆக நிலநடுக்கம் பதிவானது. இதை இந்திய தேசிய நிலநடுக்கவியல் ஆய்வு மையம் உறுதி செய்துள்ளது.

கடுமையான நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு 3 லட்சம் பேருக்கு ஆபத்து: ஜப்பான் வெளியிட்ட பகீர் அறிவிப்பு

பலுசிஸ்தானின் உத்தாலுக்கு கிழக்கு, தென்கிழக்கே 65 கி.மீ., தொலையில் 10 கி.மீ., ஆழத்தில் நிலநடுக்கத்தின் மையப்பகுதி இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது. நிலநடுக்கத்தால் ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதா என எந்த தகவல்களும் வெளியிடப்படவில்லை.

பாகிஸ்தானை போன்று ஆப்கானிஸ்தான், திபெத்திலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானில் 4.7 ரிக்டர் அளவிலும், திபெத்தில் இந்திய நேரப்படி அதிகாலை 5.41 மற்றும் 5.49 மணிக்கு அடுத்தடுத்து நிலநடுக்கம் உணரப்பட்டது. இவை இரண்டும் முறையே 3.8, 4.3 என ரிக்டரில் பதிவானது. (ஐ)




# வரி உயர்வு உடனடியாக அமலுக்கு வரும் அமெரிக்கா உறுதி!

அமெரிக்காவில் இன்று (இந்திய நேரப்படி - நாளை அதிகாலை) டிரம்ப் பரஸ்பர வரிகளை அறிவித்த உடன் அமலுக்கு வரும் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவி ஏற்ற பிறகு அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறார். கனடா, மெக்சிகோ, நாடுகளுக்கு 25 சதவீத கூடுதல் வரியும், சீனாவுக்கு 10 சதவீத கூடுதல் வரியும் விதித்து உத்தரவிட்டார். இன்று (ஏப்ரல் 02) டிரம்ப் பரஸ்பர வரிகளை அறிவிக்கிறார். அவர் அறிவித்த உடன் அமலுக்கு வரும் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்கா பத்திரிகை செயலாளர் கரோலின் லீவிட் கூறியதாவது: ஏப்ரல் 2ம் தேதி அதிபர் டிரம்ப் பரஸ்பர கட்டணங்களை அறிவிப்பார். அவர் அறிவித்த உடன் அமலுக்கு வரும்.

டிரம்ப் தற்போது தனது வர்த்தக மற்றும் கட்டணக் குழுவுடன் இருக்கிறார். அமெரிக்க மக்கள் மற்றும் தொழிலாளர்களுக்காக பல்வேறு நடவடிக்கையை எடுத்து வருகிறார். நிச்சயமாக, அதிபர் எப்போதும் ஒரு முடிவை எடுக்கத் தயாராக இருக்கிறார்.

கடந்த கால தவறுகளைச் சரிசெய்வதிலும், அமெரிக்கத் தொழிலாளர்கள் நியாயமான ஒப்பந்தத்தைப் பெறுவதை உறுதி செய்யவும் அவர் மிகவும் அக்கறை கொண்டுள்ளார். இவ்வாறு கரோலின் லீவிட் கூறினார். (ஐ)




# நிலநடுக்கத்தால் உருக்குலைந்த மியான்மர் பலி எண்ணிக்கை 2,700 ஆக உயர்ந்தது


பாங்காக் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் மியான்மர் உருக்குலைந்துள்ள நிலையில், மீட்புப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. கட்டட இடிபாடுகளுக்கு இடையே சிக்கிய 63 வயது மூதாட்டி ஒருவர் 72 மணி நேரத்திற்கு பின் உயிருடன் மீட்கப்பட்டார். பலி எண்ணிக்கையும் 2,700 ஆக அதிகரித்துள்ளது.

நம் அண்டை நாடான மியான்மரில், கடந்த மாதம் 29ம் தேதி சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில், 2,00-0க்கும் மேற்பட்டோர் பலியாகினர். நிலநடுக்கம் ஏற்பட்டு நான்கு நாட்களை கடந்த நிலையில், மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன. சாலைகளில் விரிசல்கள் ஏற்பட்டதால், மீட்புப் பணிகளை மேற்கொள்வது சவாலாக உள்ளது.

இந்நிலையில், மியான்மரின் நய்பிடாவ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு பணியின்போது கட்டட இடிபாடுகளில் சிக்கி, 91 மணி நேரத்திற்கு பின், 63 வயதான மூதாட்டி ஒருவரை மீட்புக்குழு உயிருடன் மீட்டது. இதற்கிடையே, இடிபாடுகளில் இருந்து ஏராளமான உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, பலி எண்ணிக்கை 2,719 ஆக அதிகரித்துள்ளது.

இதற்கிடையே, தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், மருத்துவ உதவிகளும் மியான்மர் மக்களுக்கு உடனடி தேவையாக உள்ளது. போதிய குடிநீர் வசதியும் இல்லாததால் அங்குள்ள மக்கள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர் (ஐ)

# அமெரிக்காவின் போர் நிறுத்த கோரிக்கையை ஏற்க ரஷ்யா மறுப்பு



போர் நிறுத்தத்திற்காக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் முன்வைத்துள்ள பரிந்துரையை தீவிரமாக பரிசீலித்து வருவதாகவும், ஆனால் தற்போதைய வடிவத்தில் அது ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வர, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தீவிர முயற்சி செய்து வருகிறார். நிபந்தனையற்ற மற்றும் முழுமையான போர் நிறுத்தத்திற்காக அமெரிக்கா - உக்ரைன் கூட்டாக முன்வைத்த யோசனையை ஏற்றுக்கொள்ள ரஷ்யா அதிபர் புடின் சமீபத்தில் மறுத்தார்.

உக்ரைன் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் தாக்குதலை தற்காலிகமாக நிறுத்திக்கொள்ள ரஷ்யா ஒப்புக் கொண்டது. ஆனாலும், உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

இதனால் கோபம் அடைந்த டிரம்ப், ரஷ்யா, மீது கூடுதல் பொருளாதார தடை விதித்து அழுத்தம் கொடுக்கவும் தயங்க மாட்டேன் என சமீபத்தில் தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்கா முன்வைத்த போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து ரஷ்ய துணை வெளியுறவு அமைச்சர் செர்ஜி ரியாப்கோவ் கூறியதாவது:

அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் தீர்வுகளை நாங்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம். ஆனால் அதன் தற்போதைய வடிவத்தில் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாங்கள் அறிந்த வரை, இந்த மோதலின் மூலகாரணங்கள் தொடர்பான பிரச்னைகளைத் தீர்ப்பது குறித்த எங்கள் பிரதான கோரிக்கைக்கு அதில் இடம் அளிக்கப்படவில்லை. அது சரி செய்யப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார. (ஐ)

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“எல்லா விடயங்களையும் ஆறு மாத காலத்துக்குள் செய்ய முடியாது. அதனால்தான் ஐந்தாண்டுகள் ஆணை வழங்கப்படுகின்றது. புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய பணியை ஆரம்பத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டியதில்லை. நல்லாட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட வரைவு நகல் உள்ளது. மேலும் பல அறிக்கைகளும் உள்ளன.

கால எல்லை பற்றி கேட்டால் என்னால் பதில் வழங்க முடியாது. ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் உள்ளிட்ட புதிய அரசமைப்பு ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் கொண்டுவரப்படும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நிச்சயம் நீக்கப்படும். குறித்த முறைமையைத் தக்க வைப்பது தொடர்பில் எவ்வித பேச்சும் எமது தரப்பில் நடக்கவில்லை.” - என்றார்.

## இ.போ.ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வஸ்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார் என்று களுத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மோதியே இந்தச் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரியவருவதாவது, வத்தளை - ஹேகித்த வீதி பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த கொழும்பு - 15 பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் ஒருவர் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்று சுயநினைவின்றி இருக்கின்றார் என்று வத்தளை பொலிஸாருக்கு நேற்று செவ்வாய்க்கிழமை தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சந்தேகநபரான பெண்ணுக்கு முதலுதவி அளித்து அவரை விசாரணை செய்தபோது சந்தேகநபரான பெண்ணிடமிருந்து 6 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், சந்தேகநபரான பெண் வெளிநாட்டில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றார் என்று தெரியவந்தது. பின்னர் சந்தேகநபரான பெண்ணுக்குச் சொந்தமான ராகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றைப் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். குறித்த சோதனை நடவடிக்கையில் ராகம பிரதேசத்தில் உள்ள வீட்டில் இருந்து சந்தேகநபரான பெண்ணின் 40 வயதுடைய கணவன் ரி - 56 ரக துப்பாக்கி மற்றும் 113 தோட்டாக்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு ஆறு குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து, முன்னெடுத்த நீண்ட விசாரணையைத் தொடர்ந்து இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2012 மற்றும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எஸ்.எம். ரஞ்சித் வட மத்திய மாகாணத்தின் முதலமைச்சராகச் செயற்பட்டபோது அவரது தனிப்பட்ட செயலாளராகக் கடமையாற்றிய ஷாந்தி சந்திரசேன முறையற்ற விதத்தில் இலாபமீட்ட இடமளித்தமை, எரிபொருள் கொடுப்பனவு சம்பளத்துடன் வழங்கப்பட்ட நிலையிலும் எரிபொருள் கொள்வனவு வவுச்சரின் ஊடாக 26 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை வழங்கியமை, அவ்வாறு வழங்குவதற்கு அரச அதிகாரிகளைத் தூண்டியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் அவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளன.

நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர் தமது தீர்ப்பை அறிவித்த நீதிபதி சந்தேகநபர்களுக்கு எதிரான முறைப்பாட்டின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்.

இதற்கமைய இலஞ்ச, ஊழல் சட்டத்தின் கீழ் குறிப்பிடக்கூடிய ஊழல் குற்றத்தை இழைத்தமைக்காகச் சந்தேகநபர்கள் இருவரையும் குற்றவாளிகளாகத் தீர்மானித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனையை அறிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவின் தம்பியே எஸ்.எம். ரஞ்சித் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டில் உள்ள தனிநபர் ஒருவரிடம் இருந்து இருந்து கோடிக்கணக்கான நிதியைப் பெற்று மோசடி செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

## மொரட்டுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம் பாணந்துறை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நால்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி தடை தொடர்பான விடயங்களை ஆராய்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றி அமைச்சரவைக்கு விதந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காகக் குறித்த அமைச்சரவை குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்த அமைச்சரவை குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு இந்தியாவில் இருந்து பாதுகாப்புக் குழு இலங்கை வருகை!

*இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேகொள்ளவுள்ள நிலையில், இந்தியாவில் இருந்து ஒரு மேம்பட்ட பாதுகாப்புக் குழு கொழும்புக்கு வந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.*

*இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வரும் முன், இலங்கை பாதுகாப்பு நிறுவனங்களை ஒருங்கிணைக்க இந்தியாவில் இருந்து ஒரு மேம்பட்ட பாதுகாப்புக்குழு கொழும்புக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*அத்துடன் இந்தியப்பிரதமரின் வருகையின் போது, கொழும்பு மற்றும் அனுராதபுரத்தில் சிறப்பு பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக மூத்த பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.*

*இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது பாதுகாப்பு விடயங்களில் அதிக கவனம் செலுத்துவதை உறுதி செய்ய பொலிஸாருக்கு தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் பிரதமரின் வருகைக்கான ஆயத்தமாக இன்று (2) பாதுகாப்பு ஒத்திகை நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# எதிர்காலத்தில் அரிசியை இறக்குமதி செய்ய தீர்மானம்!

எதிர்காலத்தில் அரிசியை இறக்குமதி செய்வதற்கு உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு பரிந்துரை செய்துள்ளது.

நுகர்வோருக்கு தட்டுப்பாடு இல்லாமல் அரிசியை வழங்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கொள்கை தீர்மானம் ஒன்றை எட்டுவதற்காக விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த, வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமையில் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு நேற்று (01) 5வது முறையாக ஜனாதிபதி செயலகத்தில் கூடியது.

இதன் போதே குறித்த விடயம் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும் அங்கு கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்களாக,

தற்போது சந்தையில் அரிசியின் விலை அதிகமாக உள்ளதோடு சில வகையான அரிசிகளுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் போதுமானளவு அரிசி இருப்புகளைப் பராமரிப்பதற்காக அரிசியை இறக்குமதி செய்வதில் அமைச்சரவை கவனம் செலுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்த ஆண்டு ஏற்பட்ட அதிக மழைவீழ்ச்சியால் இரண்டு முறை பயிர் சேதம் ஏற்பட்டு, எதிர்பார்க்கப்பட்ட அறுவடை கணிசமாக குறைவடைந்துள்ளது.

கால்நடை தீவனத்திற்காக அரிசியை ஒழுங்கற்ற முறையில் பயன்படுத்துவதும் அரிசி பற்றாக்குறைக்கு மற்றொரு முக்கிய காரணம் என தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கால்நடை உற்பத்தித் துறையில் கால்நடை தீவனத் தேவைகளுக்காக உடைந்த அரிசியை இறக்குமதி செய்வது மற்றும் மாற்று தீவனத்தைப் பயன்படுத்துவது குறித்தும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

அதன்படி, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தேவையான அளவு உடைந்த அரிசியை இறக்குமதி செய்வதற்காக விவசாய பணிப்பாளர் நாயகம் தலைமையிலான குழுவை நியமிப்பதற்கும் உணவுப் பாதுகாப்புக் குழு அனுமதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊருஹெர பகுதியில் கஞ்சா தோட்டம்– பொலிஸாரின் அதிரடி!

ஊருஹெர பகுதியில் சட்டவிரோதமான முறையில் வளர்க்கப்பட்ட கஞ்சா தோட்டமொன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு, சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் ஹொரணை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். மொனராகலை, தனமல்வில தலைமையக பொலிஸ்நிலைய அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேகொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே கஞ்சா தோட்டம் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த கஞ்சா தோட்டத்தில் சுமார் ஒன்றரை அடி உயரத்திற்கு பயிரிடப்பட்ட சுமார் இருபத்தைந்தாயிரம் கஞ்சா மரங்கள் இருந்ததாகவும், அவை அனைத்தும் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தனமல்வில தலைமையக பொலிஸ் நிலைய அதிகாரிகள் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணுக்குப்.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கேட்கவும், பொது வெளிக்குக் கொண்டுவந்து மக்களிடையே விவாதிப்பதற்கும் சிந்திப்பதற்கான சூழலை உருவாக்கத் தயங்குவதேன்? மக்களை எளிதாக அணுகும் இடத்தில் உள்ள ஊடகங்கள் எந்தவொரு சபலமுமின்றி ஒவ்வாத கருத்துகளை மக்களிடையே கொண்டு சேர்க்கும் பணிகளை அயராது செய்து வருகின்றன. இதன் விளைவாகப் பொதுவெளியில் பெண்கள் சிலாகிக்கப்படுவது அன்றாட நிகழ்வுகளாகின்றன.

ஊடகங்கள் அறத்தை இழக்காமல் அதன் கடமை உணர்ந்து நடக்க வேண்டும். சமஅளவு எண்ணிக்கையிலுள்ள சக உயிரான பெண்கள் மீது வன்மத்தை கட்டவிழ்த்துவிடுவது ஆரோக்கியமான சமூகத்திற்கு வழிகோலாது. வியாபாரம் மட்டும் ஊடகத்தின் அறமாகாது. பொதுச் சமூகத்தின் கொண்டாட்டத்தை, சிந்தனையை மாற்றுவதில் ஊடகத்தின் பங்கு அலப்பறியது. பண்பாட்டு ரீதியான மாற்றங்களை முன்னெடுப்பதில் பண்பாட்டின் முக்கியக் கூறாக இருக்கக்கூடிய ஊடகங்களின் பங்கு முக்கியமானது. அரசியல் சீர்திருத்தத்தைக் காட்டிலும் முக்கியமானது சமூக சீர்திருத்தம் என்பதை வலியுறுத்தவே அம்பேத்கர் அரசியல் சீர்திருத்தவாதியைக் காட்டிலும் வலிமையானவர் சமூக சீர்திருத்தவாதி என்கிறார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.04.2025இல் வெளியிடப்பெற்றது.